//பதிவஞ்சல்//

அனுப்புநர்

திருமதி. வ.மு. சீதா,
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
நல அலுவலர், வேலூர் - 9.

பெறுநர்

அனைத்து பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்

ந.க.எண்: என்2/24457/2024, நாள்: .06.2024

அய்யா,

பொருள்: பிற்படுத்தப்பட்டோர் (ம) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலம் - கல்வி விடுதிகள் - வேலூர் மாவட்டம் - 2024-2025 - விடுதிகளில் மாணவ, மாணவிகளை சேர்த்தல் - தொடர்பாக.

பார்வை: பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடித எண்: பி2/2820/2024, நாள்: 30.05.2024.

****

வேலூர் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 18 பள்ளி / கல்லூரி விடுதிகளில் 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் மாணவ, மாணவியர்களை சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விடுதிகளில் எவ்வித செலவினமும் இல்லாமல் பின்வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன.

i. அனைத்து விடுதி மாணவ / மாணவியருக்கு உணவு தங்கும் வசதியும் அளிக்கப்படுகிறது.

ii. மாணவ, மாணவியர்களுக்கு கட்டணம் ஏதுமின்றி தரமான வகையிலும், சுகாதார முறையிலும் உணவுகள் சமைத்து வழங்கப்படுகின்றன. (நாள்தோறும் வழங்கப்படும் உணவுப்பட்டியல் விவரம் இணைக்கப்பட்டுள்ளது.)

iii. 4 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 இணைச் சீருடைகள் வழங்கப்படும்.

iv. 10 ஆம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்களின் கல்வித் திறனை மேம்படுத்தும் பொருட்டு சிறப்பு வழிகாட்டிகள் மற்றும் வினா வங்கி நூல்கள் வழங்கப்படும்.

v. ஆண்டுதோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது.

vi. விடுதி மாணவ, மாணவியர்களிடையே கலைத்திருவிழா எனும் பெயரில் ஆண்டுதோறும் இலக்கிய (ம) விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசுகள் (ம) பாராட்டுச் சான்றுகள் வழங்கி ஊக்கப்படுத்தப்படுகிறது.

vii. 10 (ம) 12 ஆம் வகுப்பு முடித்த பின்னர் மேற்படிப்புகளை தொடர ஆண்டுதோறும் வேலைவாய்ப்புத்துறை மூலம் வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி நடத்தி மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

viii. விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு சுகாதார முறையில் குடிநீர் வசதி வழங்க Water Purifer பொருத்தப்பட்டுள்ளது.

ix. விடுதி மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டு பொருட்களாக Chease, Caroom உள்ளிட்ட உபகரணங்கள் உள்ளன.

x. விடுதி மாணவ, மாணவியர்களுக்கு பாய்கள் (ம) போர்வைகள் வழங்கப்படுகின்றன.

xi. விடுதிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டு, பொதுஅறிவு மேம்படுத்துவதற்கான பல்வேறு வகையான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

xii. விடுதி மாணவ, மாணவியர்களின் நலனுக்காக நாள்தோறும் தமிழ் (ம) ஆங்கில நாளிதழ்கள் வாங்கி வழங்கப்படுகின்றன.

xiii. விடுதிகள் தோறும் கணினி வசதிகள் பொருத்தப்பட்டு, இணைய வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

xiv. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழ்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இது போன்ற பல்வேறு வகையான வசதிகள் விடுதிகளில் செய்யப்பட்டு, மாணவ, மாணவியர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த இத்துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**<u>விடுதிகளில் சேருவதற்கான தகுதிகள்</u>**

- பெற்றோர் / பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கி.மீ.க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது.

தகுதியுடைய மாணவ / மாணவியர் விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்திலோ இலவசமாக பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினியிடம் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் 14.06.2024-க்குள் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கும்பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் யாதும் அளிக்கத் தேவையில்லை. விடுதியில் சேரும்போது மட்டும் சான்றிதழ்களைஅளித்தால் போதுமானது.

மேற்காணும் சலுகைகளை தங்களது பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தெரியபடுத்தி, தகுதியுள்ள மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் சேர உதவிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு: உணவுப் பட்டியல்

For மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்
நல அலுவலர், வேலூர் - 9.

நகல்: 1. முதன்மை கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
2. மாவட்ட கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
- அனைத்து பள்ளிகளுக்கும் மேற்காணும் விவரங்களை தெரிவிக்கும்பொருட்டு

3. ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.
4. ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை - 5.
- தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.